The *Akam* love behaviour
Comprises seven strands
From *kaikkiḷai* through *peruntiṇai,*
So has it been held.

Geographical Identities to the Modes of *Akam* Love

948. அவற்றுள்,
நடுவண் ஐந்திணை, நடுவணது ஒழிய,
படு திரை வையம் பாத்திய பண்பே.

avaṟṟuḷ,
naṭuvaṇ aintiṇai, naṭuvaṇatu oḻiya,
paṭu tirai vaiyam pāttiyap paṇpē.

The sea-girt world
Stands apportioned
To the middle five* of these strands [947]
Save for the middle of the five.

* *kuṟiñci* - hilly tract
mullai - forest tract
pālai - (desert-like condition of the above two in extreme heat)
marutam - cultivable land
neytal - littoral tract

The Structural Constituents of *Akam* Poetry

949. முதல், கரு, உரிப்பொருள், என்ற மூன்றே,
நுவலும் காலை, முறை சிறந்தனவே:-
பாடலுள் பயின்றவை நாடும் காலை.

mutal, karu, uripporuḷ, eṉṟa mūṉṟē,
nuvalum kālai, muṟai ciṟantaṉavē;
pāṭaluḷ payiṉṟavai nāṭum kālai.

Mutaṟporuḷ, karupporuḷ and *urripporuḷ**
In this order of precedence
Do define the structure of [*Akam*] poetry,
Which on examination one discerns.

* Being described in the verses that follow.

Mutaṟporuḷ

950. முதல் எனப்படுவது நிலம், பொழுது, இரண்டின்
இயல்பு என மொழிப-இயல்பு உணர்ந்தோரே.

mutal eṉappaṭuvatu nilam, poḻutu, iraṇṭiṉ
iyalpu eṉa moḻipa iyalpu uṇarntōrē.

Mutaṟporuḷ is
Aspects of land and time,
So do men of discernment find.

The Landscape Division

951. மாயோன் மேய காடு உறை உலகமும்,
சேயோன் மேய மை வரை உலகமும்,
வேந்தன் மேய தீம் புனல் உலகமும்,
வருணன் மேய பெரு மணல் உலகமும்,
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், எனச்
சொல்லிய முறையான் சொல்லவும்படுமே.

māyōṉ mēya kāṭu uṟai ulakamum,
cēyōṉ mēya mai varai ulakamum,

vēntan̲ mēya tīm pun̲al ulakamum,
varuṇan̲ mēya peru maṇal ulakamum,
mullai, kur̲iñci, marutam, neytal, en̲ac
colliya mur̲aiyān̲ collavumpaṭumē.

The forest tract which Māyōn̲* tends,
The hilly tract which Cēyōn̲* tends,
The fertile cultivable tract which Vēntan̲* tends
And the littoral tract which Varuṇan̲* tends
Are known to be
Mullai, kur̲iñci, marutam and *neytal* respectively.

* Gods equated with Tirumāl, Murukan̲, Intiran̲ and Varuṇan̲ respectively by commentators.

Season and Time

952. காரும் மாலையும்-முல்லை.

kārum mālaiyum mullai.

The rainy season and evening
Are assigned to the forest tract*.

* Such assignations of place and time go by implication with the love behaviour appropriate to the given tract.

The Hilly Tract

953. குறிஞ்சி,
கூதிர், யாமம் என்மனார் புலவர்.

kur̲iñci,
kūtir, yāmam en̲man̲ār pulavar.

The learned find
The cold season and midnight hour
Assigned to the hilly tract.

954. பனி எதிர் பருவமும் உரித்து என மொழிப.

paṉi etir paruvamum urittu eṉa moḻipa.

The early dewy season
Does also go with the hilly tract,
So has it been said.

The Cultivable Tract

955. வைகறை, விடியல், மருதம்.

vaikaṟai, viṭiyal, marutam.

The wee hours just before daybreak
Are assigned to the cultivable tract.

The Littoral Tract

956. எற்பாடு,
நெய்தல் ஆதல் மெய் பெறத் தோன்றும்.

eṟpāṭu,
neytal ātal mey peṟat tōṉṟum.

The day's close before sunset
Belongs to the littoral tract.

The Arid Tract

957. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

naṭuvunilait tiṇaiyē naṇpakal vēṉiloṭu
muṭivu nilai maruṅkiṉ muṉṉiya neṟittē.

As we see it,
The hot season and midday hour
Go with the centrally placed [arid] tract.

958. பின்பனிதானும் உரித்து என மொழிப.

pinpanitānum urittu ena molipa.

The late dewy season
Is also held to be proper to the arid tract.

Two Modes of Separation

959. இரு வகைப் பிரிவும் நிலை பெறத் தோன்றலும்
உரியது ஆகும் என்மனார் புலவர்.

iru vakaip pirivum nilai perat tōnralum
uriyatu ākum enmanār pulavar.

The two modes of separation
[The hero parting from the heroine on his male quest,
And the hero and heroine going on elopement]*
Do stand assigned to the arid tract,
So do the learned men hold.

* These two modes are variously interpreted as separation during the *kaḷavu* and *karpu* phases, separation during the two hot seasons and during the late dewy season, and separation through land and by sea.

Acceptable Deviation

960. திணை மயக்குறுதலும் கடி நிலை இலவே:
நிலன் ஒருங்கு மயங்குதல் இல என மொழிப -
புலன் நன்கு உணர்ந்த புலமையோரே.

tiṇai mayakkurutalum kaṭi nilai ilavē;
nilan oruṅku mayaṅkutal ila ena molipa
pulan nanku uṇarnta pulamaiyōrē.

That
Aspects of land and time
Assigned to a given tract
Do get mixed with those of another tract
Is no deviation unacceptable;

Yet,
No commingling is permitted among the tracts themselves;
So goes the norm by men of discernment.

961. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.

urripporuḷ allaṉa mayaṅkavum peṟumē.

Those [aspects of land and time, and distinctive features of the tracts]
Other than the *Akam* love behaviour
Do mark intermingling.

The Fivefold Akam Love Behaviour

962. புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்,
ஊடல், அவற்றின் நிமித்தம் என்றிவை-
தேரும் காலை, - திணைக்கு உரிப்பொருளே.

puṇartal, pirital, iruttal, iraṅkal,
ūṭal, avaṟṟiṉ nimittam eṉṟivai
tērum kālai, tiṇaikku uripporuḷē.

Union, separation, endurance
Pining and sulking,
And the motives therein
Are perceived to be
The strands of *Akam* love behaviour
[Proper to the five tracts of *kuṟiñci, pālai, mullai, neytal* and *marutam* respectively].

963. கொண்டு தலைக்கழிதலும், பிரிந்து அவண் இரங்கலும்,
உண்டு என மொழிப, ஓர் இடத்தான.

koṇṭu talaikkaḻitalum, pirintu avaṇ iraṅkalum,
uṇṭu eṉa moḻipa, ōr iṭattāṉa.

Elopement of the hero with the heroine
And the pining of her kin thereon
Are events marked too at times though.

964. கலந்த பொழுதும் காட்சியும் அன்ன.

kalanta poḻutum kāṭciyum aṉṉa.

So are the occurrences
Attending on
The encounter and the first sight
Of the heroine by the hero.

965. முதல் எனப்படுவது ஆயிரு வகைத்தே.

mutal eṉappaṭuvatu āyiru vakaittē.

Mutalporuḷ comprises two aspects
[Of land and time],
As noted above [950].

The Physical Features of Land

966. தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,
அவ் வகை பிறவும் கரு என மொழிப.

teyvam, uṇāvē, mā, maram, puḷ, paṟai,
ceyti yāḻiṉ pakutiyoṭu tokaii,
av vakai piṟavum karu eṉa moḻipa.

God, food, animal, tree,
Bird, drum, occupation and lute
And such of these
Constitute the distinctive physical features of the given tract of land.

967. எந் நில மருங்கின் பூவும் புள்ளும்
அந் நிலம் பொழுதொடு வாரா ஆயினும்,
வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

eṅ nila maruṅkiṉ pūvum puḷḷum
an nilam poḻutoṭu vārā āyiṉum,
vanta nilattiṉ payatta ākum.

Where the flora and fauna occur
Not marked proper to the land and season in question though,
They be deemed
Characteristic of that land and that season.

The Naming of Characters

968. பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய-
திணைதொறும் மரீஇய, திணை நிலைப் பெயரே.

peyarum viṉaiyum eṉṟu āyiru vakaiya
tiṇaitoṟum marīiya, tiṇai nilaip peyarē.

The persons that people a tract of land
Have names specific to that region;
These names fall into two categories:
Names in tune with the mores of the region
And names derived from occupations of that region.

969. ஆயர், வேட்டுவர், ஆடூஉத் திணைப் பெயர்;
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.

āyar, vēṭṭuvar, āṭūut tiṇaip peyar;
āvayiṉ varūum kiḻavarum uḷarē.

Cowherds and huntsmen
Designate region-specific persons of the masculine gender;
There are other names of principal characters such as these too
Drawn that they are on the region's occupation.

970. ஏனோர் மருங்கினும் எண்ணும் காலை,
ஆனா வகைய-திணை நிலைப் பெயரே.

ēṉōr maruṅkiṉum eṇṇum kālai,
āṉā vakaiya-tiṇai nilaip peyarē.

We find on reflection that
Inhabitants of other regions too

Have their names derived from the mores of their region
And from the occupation of that region.

Lowly men as Akam Personae

971. அடியோர் பாங்கினும், வினைவலர் பாங்கினும்,
கடிவரை இல; புறத்து என்மனார் புலவர்.

aṭiyōr pāṅkiṉum, viṉaivalar pāṅkiṉum,
kaṭivarai ila; puṟattu eṉmaṉār pulavar.

That
Men in servitude and those of the attendant class
Find portrayed as personae
In *kaikkiḷai* and *peruntiṇai* modes of love,
Which lie outside the sphere of the 'middle five'
Is not debarred,
So do thc learned hold.

972. ஏவல் மரபின் ஏனோரும் உரியர்;
ஆகிய நிலைமை அவரும் அன்னர்.

ēval marapiṉ ēṉōrum uriyar;
ākiya nilaimai avarum aṉṉar.

Such representation in *kaikkiḷai* and *peruntiṇai* [971]
Does mark men of other menial occupations too.

Modes of Separation

973. ஓதல், பகையே, தூது, இவை பிரிவே.

ōtal, pakaiyē, tūtu ivai pirivē.

Pursuit of learning,
Call of war against foemen
And missions ambassadorial
Will occasion the hero's parting from the heroine.

974. அவற்றுள்,
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன.

avaṟṟuḷ,
ōtalum tūtum uyarntōr mēṉa.

Of these three [973],
Pursuit of learning
And ambassadorial mission
Are proper to men of superior social classes.

975. தானே சேறலும், தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும், வேந்தன் மேற்றே.

tāṉē cēṟalum, taṉṉoṭu civaṉiya
ēṉōr cēṟalum, vēntaṉ mēṟṟē.

Going on war against his own enemy
And going as help to the king facing hostilities
Will be occasions
For a king to stand separated from his love.

976. மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையான்,
பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும்,
இழைத்த ஒண் பொருள் முடியவும், - பிரிவே.

mēviya ciṟappiṉ ēṉōr paṭimaiya
mullai mutalāc colliya muṟaiyāṉ,
piḻaittatu piḻaiyātu ākal vēṇṭiyum,
iḻaitta oṇ poruḷ muṭiyavum, — pirivē.

Conduct of prayers and festivities
For those of abiding note other than the humans (i.e. deities);
Restoration of righteousness where it turns deviant
In all regions extending through the forest tract;
And to make riches through virtue abroad —

Are occasions too
For the hero to remain parted from the heroine.*

* It is also interpreted as separation of the hero (king) to uphold and administer justice, and separation in quest of riches.

977. மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே.

mēlōr muraimai nālvarkkum urittē.

The conduct of prayers and festivities [976]
Stands enjoined on the inhabitants of the four regions.*

* That the quest for riches is enjoined on all the social classes is another interpretation.

978. மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப.

mannar pānkin pinnōr ākupa.

The administering of righteous conduct [976]
Also rests upon the classes [merchants and farmers]
Next in order to the king.

979. உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான.

uyarntōrkku uriya ōttināna.

Separation on account of learning
Is proper to men of superior classes.

980. வேந்து வினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்து இடன் உடைத்தே.

vēntu vinai iyarkai vēntan orīiya
ēnōr marunkinum eytu itan utaittē.

Apart from the king,
The other classes of people

Are at times
Enjoined on the kingly functions.

981. பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே.

poruḷvayiṉ piritalum avarvayiṉ urittē.

Quest for wealth
Occasioning separation
Marks those (merchant class and cultivators)
Other than the rulers of the land too.

982. உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான.

uyarntōr poruḷvayiṉ oḻukkattāṉa.

As men of upper strata
Part from their loves in quest of riches,
They do so
To uphold the mores they live by.

Voyage on the Sea

983. முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை.

munnīr vaḻakkam makaṭūuvoṭu illai.

The hero does not take the heroine with him
While he undertakes a voyage on the seas.

A Convention on Palmyra-horse riding

984. எத்திணை மருங்கினும், மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான.

ettiṇai maruṅkiṉum, makaṭūu maṭalmēl
poṟpuṭai neṟimai iṉmaiyāṉa.

No strand of *Akam* love behaviour
Does enjoin on the heroine
To ride the horse of palmyra stems,
As it goes contrary to the norms of feminine propriety.

Utterance by the Heroine's Mother

985. தன்னும் அவனும் அவளும் சுட்டி,
மன்னும் நிமித்தம், மொழிப் பொருள்-தெய்வம்,
நன்மை, தீமை, அச்சம், சார்தல், என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ,
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி,
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்,
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்,
ஆகிய கிளவியும் அவ் வழி உரிய.

taṉṉum avaṉum avaḷum cuṭṭi,
maṉṉum nimittam, moḻip poruḷ teyvam,
naṉmai tīmai accam, cārtal, eṉṟu
aṉṉa piṟavum avaṟṟoṭu tokaii,
muṉṉiya kālam mūṉṟuṭaṉ viḷakki,
tōḻi tēettum kaṇṭōr pāṅkiṉum,
pōkiya tiṟattu naṟṟāy pulampalum,
ākiya kiḷaviyum av vaḻi uriya.

As the heroine goes on elopement with the hero,
The utterances appropriate to her mother are:
She would pour out her anguished concern
To the confidante and to those who had seen the lovers on the way;
She would speak
Referring to predictions unsought and divinations and prognostications
Weighing the good and bad that might befall the lovers,
Expressing apprehensions about the path they trod
And about the help that might come their way,
Reflecting on the past, the now and the future of her daughter.

Foster-mother in Search of the Eloped Heroine

986. ஏமப் பேரூர்ச் சேரியும், சுரத்தும்,
தாமே செல்லும் தாயரும் உளரே.

ēmap pērūrc cēriyum, curattum,
tāmē cellum tāyarum uḷarē.

There are mothers (and foster-mothers) too
Who go themselves
In search of their daughters
[Gone on elopement with their lovers]
Along the streets of well-guarded towns
And through arid desert-like tracts.

A Convention of Elopement as Separation

987. அயலோர்ஆயினும், அகற்சி மேற்றே.

ayalōr āyiṉum, akaṟci mēṟṟē.

Even when the elopement takes the lovers
To another house close by within the town,
It is to be regarded as separation mode
[Of the *Akam* love conduct].

Utterance by the Confidante

988. தலை வரும் விழும நிலை எடுத்து உரைப்பினும்,
போக்கற்கண்ணும், விடுத்தற்கண்ணும்,
நீக்கலின் வந்த தம் உறு விழுமமும்,
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோற் சுட்டித்
தாய் நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்,
நோய் மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை,
அழிந்தது களை! என மொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு
என்று இவை எல்லாம், இயல்புற நாடின்,
ஒன்றித் தோன்றும் தோழி மேன.

talai varum vilūma nilai eṭuttu uraippiṉum,
pōkkaṟkaṇṇum, viṭuttaṟkaṇṇum,
nīkkaliṉ vanta tam uṟu viḻumamum,
vāymaiyum poymmaiyum kaṇṭōr cuṭṭit
tāy nilai nōkkit talaippeyarttuk koḷiṉum,
nōy mikap perukit taṉ neñcu kaluḻntōḷai,
aḻintatu kaḷai eṉa moḻintatu kūṟi
vaṉpuṟai neruṅki vantataṉ tiṟattoṭu
eṉṟu ivai ellām, iyalpuṟa nāṭiṉ,
oṉṟit tōṉṟum tōḻi mēṉa.

Perceived rightly,
The contexts that mark the utterances of the confidante
Who abides in heart-like intimacy with the heroine are:
Bringing home to the hero
The distress and despondency
That might befall the heroine
Were he to go leaving her languishing at home;
Entreating the hero to take to elopement with the heroine;
Leaving the heroine in his hands
As he consents to elopement;
Reflecting on the distress of her kin
As the heroine leaves them on elopement;
Bringing home to the hero the delusive nature of his conduct;
Consoling the heroine's mother
Who stays distressed at her daughter's elopement;
Uttering words of comfort to the heroine
Who remains distraught in solitude
By recalling the hero's words of assurance;
And such situations as these.

Utterance by the Passers-by

989. பொழுதும் ஆறும் உட்கு வரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்,
ஊரது சார்பும் செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்,
புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு

அழிந்து எதிர் கூறி விடுப்பினும், ஆங்கத்
தாய் நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும், -
கண்டோர் மொழிதல் கண்டது என்ப.

polutum ārum utku varat tōṉri
valuviṉ ākiya kurram kāṭṭalum,
ūratu cārpum cellum tēyamum
ārva neñcamoṭu ceppiya valiyiṉum,
puṇarntōr pāṅkiṉ puṇarnta neñcamoṭu
alintu etir kūri viṭuppiṉum, āṅkat
tāy nilai kaṇṭu taṭuppiṉum viṭuppiṉum
cēy nilaikku akaṉrōr celaviṉum varaviṉum,
kaṇṭōr molital kaṇṭatu eṉpa.

The patterns of utterance
Enjoined on those
Who meet on the way
The lovers in elopement are:
Warning the hero and heroine on elopement
Against the perilous nature of their journey
At such a time and along such a tract
As would be wrought with fright;
Telling them through words of kindness and concern
To stay in the village nearby
Since their destination stands removed afar;
Exhorting the couple united in love
Through words of compassion
Against the course of deed they took to;
Forbidding the foster-mother to pursue the lovers
As she has set out in search of them;
Guiding the foster-mother's pursuit of the lovers;
Speaking of the long distance the lovers traversed,
And speaking of the return of the lovers,
So goes the norm of utterance types in *Akam* poetry.

Utterance by the Hero

990. ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்,
இடைச் சுர மருங்கின் அவள் தமர் எய்திக்
கடைக் கொண்டு பெயர்தலின் கலங்கு அஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப் பால் பட்ட ஒரு திறத்தானும்,
நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு
ஊதியம் கருதிய ஒரு திறத்தானும்,
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்,
தூது இடையிட்ட வகையினானும்,
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்,
மூன்றன் பகுதியும் மண்டிலத்து அருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்,
பாசறைப் புலம்பலும், முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்,
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்,
பரத்தையின் அகற்சியின் பரிந்தோட் குறுகி
இரத்தலும் தெளித்தலும் என இரு வகையொடு
உரைத் திற நாட்டம் - கிழவோன் மேன.

oṉṟāt tamariṉum paruvattum curattum
oṉṟiya moḻiyoṭu valippiṉum viṭuppiṉum,
iṭaic cura maruṅkiṉ avaḷ tamar eytik
kaṭaik koṇṭu peyartaliṉ kalaṅku añar eytik
kaṟpoṭu puṇarnta kauvai uḷappaṭa
ap pāl paṭṭa oru tiṟattāṉum,
nāḷatu ciṉmaiyum iḷamaiyatu arumaiyum
tāḷāṇ pakkamum takutiyatu amaiṭiyum
iṉmaiyatu iḷivum uṭaimaiyatu uyarcciyum
aṉpiṉatu akalamum akaṟciyatu arumaiyum
oṉṟāp poruḷvayiṉ ūkkiya pāliṉum
vāyiṉum kaiyiṉum vakutta pakkamoṭu

ūtiyam karutiya oru tiṟattāṉum,
pukaḻum māṉamum eṭuttu vaṟpuṟuttalum,
tūtu iṭaiyiṭṭa vakaiyiṉāṉum,
ākit tōṉṟum pāṅkōr pāṅkiṉum,
mūṉṟaṉ pakutiyum maṇṭilattu arumaiyum
tōṉṟal cāṉṟa māṟṟōr mēṉmaiyum,
pācaṟaip pulampalum, muṭinta kālattup
pākaṉoṭu virumpiya viṉaittiṟa vakaiyiṉum,
kāvaṟ pāṅkiṉ āṅkōr pakkamum,
parattaiyiṉ akaṟciyiṉ parintōṭ kuṟuki
irattalum teḷittalum eṉa iru vakaiyoṭu
urait tiṟa nāṭṭam — kiḻavōṉ mēṉa.

The contexts of situations
That warrant utterance by the hero are:
As the heroine's kin would not consent
To their union in wedlock;
As the rendezvous becomes scarce;
As he finds a pretext
In the impassability of the desert-like tract
For her to accompany him;
As the heroine is persuaded into eloping with him;
As he sets out without taking the heroine with him;
As the heroine,
On elopement with him along the arid tract,
Falls into apprehension of pursuit by her kin and her being taken home,
And as she ponders public knowledge of their union which elopement brings;
As he goes,
Leaving the heroine in solitude,
In quest of wealth,
A quest that implicates
The shortness of life's span,
The preciousness of youth,
The hazards and exertions that the quest entails,
The unbecomingness of the lust for wealth
For men of nobility and standing,
The despisedness of indigence,
The search for eminence through greed of possession,

The alienation of the loved one's worth,
And the parting from the love who stands resolute in separation.
As he intends going after mind's enrichment and physical prowess
And the rewards attendant therein;
As he dilates to the heroine
Upon the abiding note such quests yield,
And upon the ignominy keeping off these quests would result in;
As he responds to the calling of being a royal emissary;
As he takes to aiding an ally in need;
As he sets out to take on hostile foemen
Who pride over their might, the might of their allies and the difficulty of invading their forts
And over the secured unapproachability of their fortresses;
And as he remains in a war-camp away from his love;
As he,
Returning after the task accomplished,
Addresses his charioteer urging him to make it swift;
As he parts from his love
For purpose of security and protection of the state;
And,
As he importunes her
After his return from prostitutes
And seeks resolution of her sulking.

Utterance by Others

991. எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே.

eñciyōrkkum eñcutal ilavē.

Characters other than those mentioned above
[Such as the heroine, foster-mother, singer-messenger, etc.]
Are not denied utterances.

Other Contexts of Utterance

992. நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்.

nikalntatu ninaittarku ētuvum ākum.

An event of the past
Recollected by the protagonists
May occasion their utterance at the moment too.

993. நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே.

nikalntatu kūri nilaiyalum tiṇaiyē.

The theme of *pālai* (separation)
May also encompass
Recalling an event of the past
And finding consolation of the mind.

Blending of Land-time Features

994. மரபு நிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப.

marapunilai tiriyā māṭciya āki
viravum poruḷum viravum eṉpa.

Where they do not entail
Breach of the conventions set,
There are blendings of features
Of land and time and flora and fauna
Marked region-specific and conduct specific,
So has it been laid down.

A Function of Similes

995. உள்ளுறை உவமம், ஏனை உவமம், எனத்
தள்ளாது ஆகும், திணை உணர் வகையே.

uḷḷuṟai uvamam, ēṉai uvamam, eṉat
taḷḷātu ākum, tiṇai uṇar vakaiyē.

Suggestive simile and the other (explicit) simile
Are pointers unmistakable
To the identification of the strands of *Akam* love [cf 1171-73 and 1184-86].

Nature and Function of the Suggestive Simile

996. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்
கொள்ளும் என்ப - குறி அறிந்தோரே.

uḷḷuṟai teyvam oḻintatai nilam eṉak
koḷḷum eṉpa — kuṟi aṟintōrē.

The suggestive simile
Has for its vehicle
All distinctive features of the physical world of the given tract [966],
Saving the deities,
So does the authority hold.

997. உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிக என
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்.

uḷḷuṟuttu itaṉoṭu ottup poruḷ muṭika eṉa
uḷḷuṟuttu iṟuvatai uḷḷuṟai uvamam.

The suggestive simile is one
Where
The tenor comes revealing
As it draws implicitly on the vehicle described.

e.g. Vide *Glossary.*

Nature of Non-suggestive Similes

998. ஏனை உவமம் தான் உணர் வகைத்தே.

ēṉai uvamam tāṉ uṇar vakaittē.

The other, explicit simile
Marks
A tenor-vehicle relationship obviously stated.

e.g. Vide *Glossary.*

The Defining Features of *Kaikkiḷai*

999. காமம் சாலா இளமையோள்வயின்,
ஏமம் சாலா இடும்பை எய்தி,
நன்மையும் தீமையும் என்று இரு திறத்தான்,
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து,
சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல் -
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

kāmam cālā iḷamaiyōḷvayin,
ēmam cālā iṭumpai eyti,
nanmaiyum tīmaiyum enru iru tirattān,
tannoṭum avaḷoṭum tarukkiya puṇarttu,
col etir peṟāan colli inpuṟal
pullit tōnrum kaikkiḷaik kuṟippē.

The defining features of unrequited love conduct [kaikkiḷai] are:
One falls in for a lass
With a passion of sex unformed yet
And yet,
One turns incurably afflicted;
One enters into conversation with that lass
Which alternates between praise and dispraise;
No reciprocity on her part marked though,
One persists indulgently in one's address.

The Defining Features of *Peruntiṇai*

1000. ஏறிய மடல் திறம், இளமை தீர் திறம்,
தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம்,
மிக்க காமத்து மிடலொடு தொகைஇ,
செப்பிய நான்கும் - பெருந்திணைக் குறிப்பே.

ēṟiya maṭal tiṟam iḷamai tīr tiṟam,
tēṟutal oḻinta kāmattu miku tiṟam,
mikka kāmattu miṭaloṭu tokaii,
ceppiya nānkum — peruntiṇaik kuṟippē.

The four defining features of abnormal sexual passion [*peruntiṇai*] are:
Taking to riding of the horse made of palmyra stems;
Man and woman past their youth drawn to each other;
The passion of lust growing uncontained and out of proportion;
And excessive lust seeking gratification through forced union.

Other Features of *Kaikkiḷai*

1001. முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப.

muṉṉaiya nāṉkum muṉṉataṟku eṉpa.

The four states of love conduct,*
Which precede the four marked for abnormal passion above [1000]
[Threat of riding the palmyra stem horse,
Man drawn to woman in the prime of youth,
The passion of love remaining within bounds,
And intense passion not seeking forced union],
Do go with the unrequited love conduct [*kaikkiḷai*].

* According to another interpretation, the four states are these treated in verses 992, 993, 994, 995.

Metrical Forms Proper to *Akam* Poetry

1002. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்,
உரியது ஆகும் என்மனார் புலவர்.

nāṭaka vaḷakkiṉum ulakiyal vaḷakkiṉum
pāṭal cāṉṟa pulaṉeṟi vaḷakkam
kaliyē paripāṭṭu āyiru pāviṉum,
uriyatu ākum eṉmaṉār pulavar.

The authority holds that
kalippā and *paripāṭal* metrical forms
Are appropriate to *(Akam)* literary compositions
Which are informed by
Dramatic and worldly conventions.

Non-naming Convention

1003. மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்.

makkaḷ nutaliya akaṉ aintiṇaiyum
cuṭṭi oruvarp peyar koḷap peṟāar.

No proper names
Shall designate the human characters
That people the compositions
Treating the [centrally placed] fivefold *Akam* love conduct.

1004. புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.

puṟattiṇai maruṅkiṉ poruntiṉ allatu
akattiṇai maruṅkiṉ aḷavutal ilavē.

Such proper names go right with the *Puṟam* [non-*Akam*] characters
And not with the *Akam* characters [1003].

2. புறத்திணை இயல்

puṟattiṇai iyal

Puṟam Life

Veṭci Theme

1005. அகத்திணை மருங்கின் அரில் தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்,
வெட்சிதானே குறிஞ்சியது புறனே;
உட்கு வரத் தோன்றும் ஈர்-ஏழ் துறைத்தே.

akattiṇai maruṅkiṉ aril tapa uṇarntōr
puṟattiṇai ilakkaṇam tiṟappaṭak kiḷappiṉ,
veṭcitāṉē kuṟiñciyatu puṟaṉē;
uṭku varat tōṉṟum īr ēḻ tuṟaittē.

Looking into *Puṟam* composition
With an unmistakable grasp of *Akam* poetics,
One does discern that
Veṭci is the non-*Akam* parallel to *kuṟiñci* theme,
And it ramifies into fourteen substrands of awesome nature.

1006. வேந்து விடு முனைஞர் வேற்றுப் புலக் களவின்
ஆ தந்து ஓம்பல் மேவற்று ஆகும்.

vēntu viṭu muṉaiñar vēṟṟup pulak kaḷaviṉ
ā tantu ōmpal mēvaṟṟu ākum.

Veṭci is
Men at the border-posts,
Charged by their ruler,
Capturing the cows of the hostile king by stealth
And keeping them right under guard.

Substrands of the Veṭci Theme

1007. படை இயங்கு அரவம், பாக்கத்து விரிச்சி,
புடை கெடப் போகிய செலவே, புடை கெட
ஒற்றின் ஆகிய வேயே, வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்து இறை, முற்றிய
ஊர் கொலை, ஆ கோள், பூசல் மாற்றே,
நோய் இன்று உய்த்தல், நுவல்வழித் தோற்றம்,
தந்து நிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை, என
வந்து ஈர்-ஏழ் வகையிற்று ஆகும்.

paṭai iyaṅku aravam, pākkattu viricci,
puṭai keṭap pōkiya celavē, puṭai keṭa
o<u>rr</u>i<u>n</u> ākiya vēyē, vēyppu<u>r</u>am
mu<u>rr</u>i<u>n</u> ākiya pu<u>r</u>attu i<u>r</u>ai mu<u>rr</u>iya
ūr kolai, ā kōḷ, pūcal mā<u>rr</u>ē,
nōy i<u>nr</u>u uyttal nuvalva<u>l</u>it tō<u>rr</u>am,
tantu ni<u>r</u>ai, pātīṭu, uṇṭāṭṭu, koṭai, e<u>n</u>a
vanta īr ē<u>l</u> vakaiyi<u>rr</u>u ākum.

The fourteen substrands of the *veṭci* theme are:
The clamour
That marks the army's movement to lift foeman's cows;
The utterances of townsfolk around
Coming for good omens for the marching men;
The men's march
Being unknown to the foeman's spies
That infiltrate into their midst;
The marching men's spying
Unnoticed by the foemen;
Lying in wait for the moment opportune to lift the cows
Encircling the foemen's positions spied right;
Slaying of foemen that offer resistance;
Capturing the cows therein;
Putting to rout the foemen in pursuit;
Being back home
With no affliction to the cattle captured;
Home that they are
To witness cheer and accolade;

Securing the herds of cows at home;
The cows captured being shared;
Revelry marking the victorious seizure of cows
And gifting away of cows to others too.

1008. மறம் கடைக்கூட்டிய குடிநிலை*, சிறந்த
கொற்றவை நிலையும்-அத் திணைப் புறனே.

maṟam kaṭaikkūṭṭiya kuṭinilai, ciṟanta
koṟṟavai nilaiyum at tiṇaip puṟanē.

Extolling the clan of warriors rooted in valour,
And worshipping Koṟṟavai the Goddess of victory
Also fall under the theme of *veṭci*
The non-*Akam* parallel to the *Akam* theme *kuṟiñci.*

* A textual variation is *tuṭinilai* which means adoring and worshipping the war-drum

The Ramifications of the Veṭci Theme

1009. வெறி அறி சிறப்பின் வெவ் வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்; உறு பகை
வேந்திடை தெரிதல் வேண்டி, ஏந்து புகழ்,
போந்தை, வேம்பே, ஆர், என வரூஉம்
மா பெருந் தானையர் மலைந்த பூவும்;
வாடா வள்ளி, வயவர் ஏத்திய
ஓடாக் கழல்-நிலை உளப்பட, ஓடா
உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்;
மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பின்
தாவா விழுப் புகழ்ப் பூவை நிலையும்;
ஆர் அமர் ஒட்டலும்; ஆ பெயர்த்துத் தருதலும்;
சீர் சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தலும்;
தலைத் தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்;
அனைகக்கு உரி மரபினது கரந்தை அன்றியும்,
வரு தார் தாங்கல், வாள் வாய்த்துக் கவிழ்தல், என்று
இரு வகைப் பட்ட பிள்ளை நிலையும்;
வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க,
நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டும்;

காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல்,
சீர்த்த மரபின் பெரும்படை, வாழ்த்தல், என்று
இரு-மூன்று மரபின் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட எழு-மூன்று துறைத்தே.

veṟi aṟi ciṟappiṉ vev vāy vēlaṉ
veṟiyāṭṭu ayarnta kāntaḷum; uṟu pakai
vēntiṭai terital vēṇṭi, ēntu pukaḻ,
pōntai, vēmpē, ār, eṉa varūum
mā peruntāṉaiyar malainta pūvum;
vāṭā vaḷḷi, vayavar ēttiya
ōṭāk kaḻal-nilai uḷappaṭa, ōṭā
uṭal vēntu aṭukkiya uṉṉa nilaiyum;
māyōṉ mēya maṉ peruñ ciṟappiṉ
tāvā viḻup pukaḻp pūvai nilaiyum;
ār amar ōṭṭalum; ā peyarttut tarutalum;
cīr cāl vēntaṉ ciṟappu eṭuttu uraittalum;
talait tāḷ neṭumoḻi taṉṉoṭu puṇarttalum;
aṉaikku uri marapiṉatu karantai aṉṟiyum,
varu tār tāṅkal, vāḷ vāyttuk kaviḻtal, eṉṟu
iru vakaip paṭṭa piḷḷai nilaiyum;
vāḷ malaintu eḻuntōṉai makiḻntu paṟai tūṅka,
nāṭu avaṟku aruḷiya piḷḷaiyāṭṭum;
kāṭci, kālkōḷ, nīrppaṭai, naṭutal,
cīrtta marapiṉ perumpaṭai, vāḻttal, eṉṟu
iru-mūṉṟu marapiṉ kalloṭu puṇarac
collappaṭṭa eḻu mūṉṟu tuṟaittē.

There are in addition
Twenty-one substrands
That the theme of *veṭci* ramifies into:
kāntaḷ, the dance of possession,
Danced by the ripe, prophetic-tongued vēlaṉ [wearing *kāntaḷ* flowers]
The accomplished one that he is;
Wearing of palmyra, morgosa and mountain ebony,
The [totemic] flowers of towering note
That mark identity and distinctiveness
Among soldiers who make the massive armies

Which the great monarchs of burning hostility commanded*;
The *vaḷḷi* dance by the folk of the hilly tract;
The dance by folk
Decorating a youthful victor with anklets
And singing his praises;
Reading the *uṉṉam* tree for omens
On the victory of the undaunted fiery monarch in the battlefield;
Praising the protective reign of the monarch
Likening it to the protection of God Māyōṉ
Whose complexion the bilberry flower resembles;
Rout of foemen in a fierce battle;
Recovery of the cows captured;
Singing the praises of the monarch of lasting note;
The warrior taking lofty vows
On account of his exceeding prowess in war;
Apart from these
Which the *karantai* theme characterizes,
The others proper to *veṭci* are:
The twofold *piḷḷainilai* of
Resisting the vanguard of the opposing army
And being felled by the enemy's sword;
The people rejoicing at the valour of the warrior,
Who withstood the strike of the enemy's sword,
To the accompaniment of drum-beat,
And bestowing the land on him;
The choice of the proper stone
For erecting the memorial of the fallen warrior;
Commencing the sculpturing of the dead warrior's image;
Giving the stone a ceremonial bathing;
Erecting the stone thus sculptured;
Bestowing honours right in accord with tradition;
And praise and worship extended to the stone.

* Palmyra, the totemic flower of the Cēra; Morgosa, the totemic flower of the Pāṇṭiya; Mountain ebody, the totemic flower of the Cōḻa.

Vañci Theme

1010. வஞ்சிதானே முல்லையது புறனே;
எஞ்சா மண் நசை வேந்தனை வேந்தன்
அஞ்சு தகத் தலைச் சென்று, அடல் குறித்தன்றே.

vañcitānē mullaiyatu puṟanē;
eñcā maṇ nacai vēntaṉai vēntaṉ
añcu takat talaic ceṉṟu, aṭal kuṟittaṉṟē.

Vañci is the *Puṟam* parallel to the *Akam* theme *mullai;*
It is
The vanquishing of a king,
Marked by uncontained hunger for other's soil,
By another king
Through a frightful display of prowess.

Substrands of the Vañci Theme

1011. இயங்கு படை அரவம், எரி பரந்து எடுத்தல்,
வயங்கல் எய்திய பெருமையானும்,
கொடுத்தல் எய்திய கொடைமையானும்,
அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும்,
மாராயம் பெற்ற நெடுமொழியானும்,
பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்,
வரு விசைப் புனலைக் கற் சிறை போல
ஒருவர் தாங்கிய பெருமையானும்,
பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்,
வென்றோர் விளக்கமும், தோற்றோர் தேய்வும்,
குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்,
அழி படை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ,
கழி பெருஞ் சிறப்பின் துறை பதின்மூன்றே.

iyaṅku paṭai aravam, eri parantu eṭuttal,
vayaṅkal eytiya perumaiyāṉum,
koṭuttal eytiya koṭaimaiyāṉum,
aṭuttu ūrntu aṭṭa koṟṟattāṉum,
mārāyam peṟṟa neṭumoḻiyāṉum,
poruḷiṉṟu uytta pērāṇ pakkamum,

varu vicaip puṉalaik kaṟ ciṟai pōla
oruvaṉ tāṅkiya perumaiyāṉum,
piṇṭam mēya peruñcōṟṟu nilaiyum,
veṉṟōr viḷakkamum tōṟṟōr tēyvum,
kuṉṟāc ciṟappiṉ koṟṟa vaḷḷaiyum,
aḻi paṭai taṭṭōr taḻiñciyoṭu tokaii,
kaḻi peruñ ciṟappiṉ tuṟai patiṉmūṉṟē.

The *vañci Puṟam* theme above [1010]
Ramifies into thirteen substrands of worthy note:
The clamour that marks the army's march;
Setting the foemen's land on fire;
The radiant glory that attends the feats of prowess;
The acts of liberality extended by the monarch;
The acts of valour
With which the enemy is charged at close quarters
And is sent to his doom;
The boast of the warriors
As recipients of the ruler's gifts and honours;
The dauntless daring of foemen as if they were a trifle;
Holding in single-handedly
The advance of the hostile forces
As does a rocky dam
That contains surging floods;
The king giving a grand feast
To his warriors on the eve of battle;
The pervasive radiant note of fame
That attends the victorious king;
The decline and debility
That go with the vanquished;
The inexhaustible prowess of the king in war
And the great prosperity that it brings
Praised in the pestle song;
And the king tending and embracing his warriors
Wounded through acts of valour in battle.

Uḻiñai Theme

1012. உழிஞைதானே மருதத்துப் புறனே;
முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்
அனை நெறி மரபிற்று ஆகும் என்ப.

uḻiñaitāṉē marutattup puṟaṉē;
muḻu mutal araṇam muṟṟalum kōṭalum
aṉai neṟi marapiṟṟu ākum eṉpa.

Uḻiñai is the *Puṟam* parallel to the *Akam* theme *marutam;*
It is
Laying siege to the fortress well-fortified
And having it captured too,
So stands the norm set.

1013. அதுவேதானும் இரு-நால் வகைத்தே.

atuvētāṉum iru nāl vakaittē.

Into eight substrands the *uḻiñai* theme ramifies.

Substrands of the *Uḻiñai* Theme

1014. கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்,
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்,
தொல் எயிற்கு இவர்தலும், தோலது பெருக்கமும்,
அகத்தோன் செல்வமும், அன்றியும் முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும், திறல்பட
ஒரு தான் மண்டிய குறுமையும், உடன்றோர்
வரு பகை பேணார் ஆர் எயில் உளப்பட,
சொல்லப்பட்ட நால்-இரு வகைத்தே.

koḷḷār tēem kuṟitta koṟṟamum,
uḷḷiyatu muṭikkum vēntaṉatu ciṟappum,
tol eyiṟku ivartalum, tōlatu perukkamum,
akattōṉ celvamum, aṉṟiyum muraṇiya
puṟattōṉ aṇaṅkiya pakkamum, tiṟalpaṭa

oru tāṉ maṇṭiya kuṟumaiyum, uṭaṉṟōr
varu pakai pēṇār ār eyil uḷappaṭa,
collappaṭṭa nāl iru vakaittē.

The eight substrands of the *uḻiñai* theme are:
The overweening pride
That attends a monarch's intent
To take on the defiant foemen;
The greatness of the monarch
Who translates his intent into reality;
Climbing the ancient fort of the enemy;
The great spectacle of besieging men wearing shields;
The affluence of the besieged;
The sufferings the besieging king inflicted;
Single-handed mighty show of resistance by the besieged;
And the fort that yields not to the advances of the enemy.

Remifications of the *Uḻiñai* Theme

1015. குடையும், வாளும், நாள்கோள்; அன்றி,
மடை அமை ஏணிமிசை மயக்கமும்; கடைஇச்
சுற்று அமர் ஒழிய வென்று கைக் கொண்டு,
முற்றிய முதிர்வும்; அன்றி, முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்; மற்று அதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமையானும்;
நீர்ச் செரு வீழ்ந்த பாசியும்; அதாஅன்று,
ஊர்ச் செரு வீழ்ந்த மற்றதன் மறனும்;
மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்;
இகல் மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலமும்;
வென்ற வாளின் மண்ணொடு ஒன்ற,
தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ,
வகை நால்-மூன்றே துறை என மொழிப.

kuṭaiyum vāḷum nāḷkōḷ, aṉṟi,
maṭai amai ēṇimicai mayakkamum; kaṭaiic
cuṟṟu amar oḻiya veṉṟu kaik koṇṭu;
muṟṟiya mutirvum; aṉṟi, muṟṟiya
akattōṉ vīḻnta nocciyum; maṟṟu ataṉ

puṟattōṉ vīḻnta putumaiyāṉum;
nīrc ceru vīḻnta pāciyum; ataaṉṟu,
ūrc ceru vīḻnta maṟṟataṉ maṟaṉum;
matilmicaikku ivarnta mēlōr pakkamum;
ikal matil kuṭumi koṇṭa maṇṇumaṅkalamum;
veṉṟa vāḷiṉ maṇṇoṭu oṉṟa,
tokainilai eṉṉum tuṟaiyoṭu tokaii,
vakai nāl-mūṉṟē tuṟai eṉa moḻipa.

Uḻiñai marks twelve other substrands too:
Sending of the royal parasol and sword at an auspicious hour
Preceding the siege of the foe intended;
The raging fight of the soldiers
As they stand on ladders fitted to the fort;
The fierce, resolute battle
Intended to end the siege outside the fortress;
The mighty defense offered by the besieged within;
Breach of the defense by the besieging men;
Action in the moat of the fortress;
Carrying the battle thereon
Into the town of the besieged;
Triumphant scaling of the fort within;
The ceremonial bath of the victorious king
And his taking the crown of the vanquished;
The ceremonial bath of the sword of the victor;
And the absolute surrender of the vanquished.

Tumpai Theme

1016. தும்பைதானே நெய்தலது புறனே;
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலை அழிக்கும் சிறப்பிற்று என்ப.

tumpaitāṉē neytalatu puṟaṉē;
maintu poruḷāka vanta vēntaṉaic
ceṉṟu talai aḻikkum ciṟappiṟṟu eṉpa.

Tumpai is the *Puṟam* parallel to the *Akam* theme *neytal*;
It is in particular

The theme of undoing the might of an invading monarch
Burning with an overweening pride in his prowess.

1017. கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்,
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இரு நிலம் தீண்டா அரு நிலை வகையொடு
இரு பாற்பட்ட ஒரு சிறப்பின்றே.

kaṉaiyum vēlum tuṇaiyuṟa moyttaliṉ,
ceṉṟa uyiriṉ niṉṟa yākkai
iru nilam tīṇṭā aru nilai vakaiyoṭu
iru pāṟ paṭṭa oru ciṟappiṉṟē.

The life of the warrior in action departing,
With his body having been pierced thick and fast
By the rain of arrows and spears of foemen,
There is the wondrous spectacle of the man in two pieces —
The body standing erect without falling on the ground
In the manner of the leech cut into parts staying alive.

Substrands of the Tumpai Theme

1018. தானை, யானை, குதிரை, என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்;
வேல் மிகு வேந்தனை மொய்த்தவழி, ஒருவன்
தான் மீண்டு எறிந்த தார் நிலை; அன்றியும்,
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்;
ஒருவன், ஒருவனை, உடை படை புக்கு,
கூழை தாங்கிய எருமையும்; படை அறுத்து,
பாழி கொள்ளும் ஏமத்தானும்;
களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்; களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும்; வாள் வாய்த்து,
இரு பெரு வேந்தர்தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்;
செருவகத்து இறைவன் வீழ்ந்தென, சினைஇ,
ஒருவன் மண்டிய நல் இசை நிலையும்;
பல் படை ஒருவற்கு உடைதலின், மற்றவன்

ஒரு வாள் வீசிய நூழிலும்; உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

tāṉai, yāṉai, kutirai, eṉṟa
nōṉār uṭkum mū vakai nilaiyum;
vēl miku vēntaṉai moyttavaḻi, oruvaṉ
tāṉ mīṇṭu eṟinta tār nilai; aṉṟiyum,
iruvar talaivar taputip pakkamum;
oruvaṉ, oruvaṉai, uṭai paṭai pukku,
kūḻai tāṅkiya erumaiyum; paṭai aṟuttu,
pāḻi koḷḷum ēmattāṉum;
kaḷiṟu eṟintu etirntōr pāṭum; kaḷiṟṟoṭu
paṭṭa vēntaṉai aṭṭa vēntaṉ
vāḷōr āṭum amalaiyum; vāḷ vāyttu,
iru peru vēntartāmum cuṟṟamum
oruvarum oḻiyāt tokainilaik kaṇṇum;
ceruvakattu iṟaivaṉ vīḻnteṉa, ciṉaii,
oruvaṉ maṇṭiya nal icai nilaiyum;
pal paṭai oruvaṟku uṭaitaliṉ, maṟṟavaṉ
oḷ vāḷ vīciya nūḻilum; uḷappaṭap
pullit tōṉṟum paṉṉiru tuṟaittē.

The theme of *tumpai* above [1015]
Ramifies into twelve substrands:
The three columns of infantry, elephantry and cavalry
That strike terror among the foemen;
The deed of mettle by a warrior
That leaves his charge aside
And puts the enemy soldiers to rout
Who come to surround his king
As he keeps daring them with his spear;
The chiefs of the two contending monarchs
Falling to death in personal combat
Besides their prop for their rulers in action;.
The daring of an army chief
That comes up braving the odds like a buffalo
To stand at the head of the rear of his army
As it tends to retreat in disarray;

The grit of a warrior in action
Though he stands disarmed of his weapons;
The death of the warriors
That braved the charging elephants;
The clamour of singing and dancing
Of the warriors of the victorious king
Who felled his enemy king to death along with his elephant;
The annihilation of the two contending monarchs
Along with their kindred folk in deed
In their bloody conflict with swords;
The famed act of a warrior
Who finds his king felled in action
And rises in ire uncontained to fight the foe
And the feat exceptional of the warrior
That sends columns of enemy's army into disarray
And goes about waving his brilliant winning sword.

Vākai Theme

1019. வாகைதானே பாலையது புறனே;
தா இல் கொள்கைத் தம்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.

vākaitāṉē pālaiyatu puṟaṉē;
tā il koḷkait tamtam kūṟṟaip
pākupaṭa mikutip paṭuttal eṉpa.

Vākai is the *Puṟam* parallel to the *Akam* theme *pālai*,
Which informs
Exaltation of the unsullied attainments of persons
As they abide in their vocations of expertise.

Modes of Vocations

1020. அறு வகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்,
ஐவகை மரபின் அரசர், பக்கமும்,
இரு-மூன்று மரபின் ஏனோர் பக்கமும்,
மறு இல் செய்தி மூவகைக் காலமும்

நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்,
நால்-இரு வழக்கின் தாபதப் பக்கமும்,
பால் அறி மரபின் பொருநர்கண்ணும்,,
அனை நிலை வகையொடு ஆங்கு எழு வகையான்
தொகை நிலைபெற்றது என்மனார் புலவர்.

aṟu vakaip paṭṭa pārppaṉap pakkamum,
ai vakai marapiṉ aracar pakkamum,
iru-mūṉṟu marapiṉ ēṉōr pakkamum,
maṟu il ceyti mūvakaik kālamum
neṟiyiṉ āṟṟiya aṟivaṉ tēyamum,
nāl iru vaḻakkiṉ tāpatap pakkamum,
pāl aṟi marapiṉ porunarkaṇṇum,
aṉai nilai vakaiyoṭu āṅku eḻu vakaiyāṉ
tokai nilaipeṟṟatu eṉmaṉār pulavar.

The seven modes of vocations
Which the theme of *vākai* celebrates are:
The sixfold occupations of the brahmins
[Learning, instruction, performing sacrifices,
Making others perform sacrifices,
Munificence and being beneficiaries of munificence];
The fivefold occupations of the kings
[Learning, performing sacrifices, munificence,
Protecting the country and administering justice];
The sixfold occupations of the other [tradesmen and cultivating] classes
[Learning, farming, trading, rearing cattle
Forms of worship and acts of liberality];
The calling of sages and astrologers —
The flawless reading of planetary movements
In relation to their effects on the past, present and future l-l
The eightfold functions of ascetics
[Bathing, lying on the bare ground
Wearing leather covering, consecrated fire worship,
Keeping away from habitations of men,
Keeping undressed hair,
Eating forest produce and worshipping god];
The demarcated skills of excellence of the warrior class;

And the myriad callings other than the above
[Such as music, drama and singing].

Substrands of the Vākai Theme

1021. கூதிர், வேனில், என்று இரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்;
ஏரோர் களவழி அன்றி, களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும்; தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்;
ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்;
பெரும் பகை தாங்கும் வேலினானும்,
அரும் பகை தாங்கும் ஆற்றலானும்,
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்;
ஒல்லார் நாண, பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து,
தொல் உயிர் வழங்கிய அவிப்பலியானும்;
ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்;
பகட்டினானும் ஆவினானும்
துகள் தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்;
கட்டில் நீத்த பாலின்கண்ணும்;
எட்டு வகை நுதலிய அவையகத்தானும்;
கட்டு அமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும்;
இடை இல் வண் புகழ்க் கொடைமையானும்;
பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்;
பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்;
அருளொடு புணர்ந்த அகற்சியானும்;
காமம் நீத்த பாலினானும்;-என்று
இரு பாற்பட்ட ஒன்பதின் துறைத்தே.

kūtir, vēṉil, eṉṟu iru pācaṟaik
kātaliṉ oṉṟik kaṇṇiya vakaiyiṉum;
ērōr kaḷavaḻi aṉṟi, kaḷavaḻit
tērōr tōṟṟiya veṉṟiyum; tērōr
veṉṟa kōmāṉ muṉtērk kuravaiyum;
oṉṟiya marapiṉ piṉtērk kuravaiyum;
perum pakai tāṅkum vēliṉāṉum,
arum pakai tāṅkum āṟṟalāṉum,

pullā vāḻkkai vallāṉ pakkamum;
ollār nāṇa, periyavark kaṇṇic
colliya vakaiyiṉ oṉṟoṭu puṇarntu,
tol uyir vaḻaṅkiya avippaliyāṉum;
ollār iṭavayiṉ pulliya pāṅkiṉum;
pakaṭṭiṉāṉum āviṉāṉum
tukaḷ tapu ciṟappiṉ cāṉṟōr pakkamum;
kaṭṭil nītta pāliṉkaṇṇum;
eṭṭu vakai nutaliya avaiyakattāṉum;
kaṭṭu amai oḻukkattuk kaṇṇumaiyāṉum;
iṭai il vaṇ pukaḻk koṭaimaiyāṉum;
piḻaittōrt tāṅkum kāvalāṉum;
poruḷoṭu puṇarnta pakkattāṉum;
aruḷoṭu puṇarnta akaṟciyāṉum;
kāmam nītta pāliṉāṉum; — eṉṟu
iru pāṟ paṭṭa oṉpatiṉ tuṟaittē.

Eighteen are the ramifications
That the *vākai* theme marks:
Staying at the warcamp
In the cold season and the hot season
In fond devotion to the deed on hand;
The winning feats in the battlefield of warriors on chariots,
Beside the attainments of ploughmen in the cornfield;
The circular *kuravai* dance in front of his chariot
Danced by his warriors
As their monarch stands victorious over his chariot-borne foemen;
The circular *kuravai* dance in the rear of his chariot
Danced by the kindred folk
As their monarch stands victorious over his chariot-borne foemen;
The deed of the spear that holds off massive charges;
The prowess of men that holds in mighty strikes;
The manly fortitude that disregards the burden of this unavailing existence;
The warrior offering his crowning life to fire
In fulfilment of his vow to the exalted
Putting the hostile foemen to shame thereat;
Extending hands of friendship to the enemy;
The eminence that attends possession of bulls and cows

By which to efface the evil of indigence;
The glory of abdicating the throne to take to renunciation;
The eight qualities that mark a courtier
[Nobility of birth, learning, virtuous conduct,
Truthfulness, purity, equity
And absence of envy and greed];
Such modes of conduct as enjoined by sage works;
Unceasing acts of liberality that entail lasting renown;
Bearing no malice towards men that do evil unto one;
Being endowed with the wealth of the spirit;
Mercy and compassion as marks the detached mind;
And being freed of the fetters of want.

Kāñci Theme

1022. காஞ்சிதானே பெருந்திணைப் புறனே;
பாங்கு அருஞ் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே.

kāñcitāṉē peruntiṇaip puṟaṉē;
pāṅku aruñ ciṟappiṉ pal āṟṟāṉum
nillā ulakam pulliya neṟittē.

Kāñci is the *Puṟam* parallel to the *Akam* theme *peruntiṇai*;
It informs
The unavailingness all
Of the ephemeral nature of earthly existence.

Substrands of the Kāñci Theme

1023. மாற்ற அருங் கூற்றம் சாற்றிய பெருமையும்,
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்,
பண்பு உற வரூஉம் பகுதி நோக்கிப்
புண் கிழித்து முடியும் மறத்தினானும்,
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோற்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்,
"இன்னன்!" என்று இரங்கிய மன்னையானும்
இன்னது பிழைப்பின் இது ஆகியர்! எனத்

துன்ன அருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும்,
இன் நகை மனைவி பேஎய் புண்ணோன்-
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்,
நீத்த கணவன்-தீர்த்த வேலின்
பேஎத்த மனைவி ஆஞ்சியானும்,
நிகர்த்து மேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்,
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ,
ஈர்-ஐந்து ஆகும் என்ப. பேர் இசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல்-மயக்கத்தானும்,
தாமே எய்திய தாங்க அரும் பையுளும்,
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந்தமும்,
நனி மிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனி மகள் புலம்பிய முதுபாலையும்,
கழிந்தோர் தேஎத்துக் கழி படர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்,
காதலி இழந்த தபுதார நிலையும்,
காதலன் இழந்த தாபத நிலையும்,
நல்லோள் கணவனொடு நளி அழல் புகீஇச்
சொல் இடையிட்ட பாலை நிலையும்,
மாய் பெருஞ் சிறப்பின் புதல்வற் பயந்த
தாய் தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்,
மலர் தலை உலகத்து மரபு நன்கு அறியப்
பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு,
நிறை அருஞ் சிறப்பின் துறை இரண்டு உடைத்தே.

māṟṟa aruṅ kūṟṟam cāṟṟiya perumaiyum,
kaḻintōr oḻintōrkkuk kāṭṭiya mutumaiyum,
paṇpu uṟa varūum pakuti nōkkip
puṇ kiḻittu muṭiyum maṟattiṉāṉum,
ēmac cuṟṟam iṉṟip puṇṇōṟ
pēey ōmpiya pēeyp pakkamum,
"iṉṉaṉ!" eṉṟu iraṅkiya maṉṉaiyāṉum
iṉṉatu piḻaippiṉ itu ākiyar eṉat
tuṉṉa aruñ ciṟappiṉ vañciṉattāṉum,

in nakai manaivi pēey punnōn-
tunnutal katinta totāak kāñciyum,
nītta kanavan-tīrtta vēlin
pēetta manaivi āñciyānum,
nikarttu mēl vanta vēntanotu mutukuti
makatpātu añciya makatpālānum,
mulaiyum mukanum cērttik kontōn
talaiyotu mutinta nilaiyotu tokaii,
īr-aintu ākum enpa pēr icai
māynta makanaic curriya curram
māynta pūcal mayakkattānum,
tāmē eytiya tānka arum paiyulum,
kanavanotu mutinta patarcci nōkkic
celvōr ceppiya mūtānantamum,
nani miku curattitaik kanavanai ilantu
tani makal pulampiya mutupālaiyum,
kalintōr tēettuk kali patar urīi
olintōr pulampiya kaiyaru nilaiyum,
kātali ilanta taputāra nilaiyum,
kātalan ilanta tāpata nilaiyum,
nallōl kanavanotu nali alal pukīic
col itaiyitta pālai nilaiyum,
māy peruñ cirappin putalvar payanta
